## கட்டுரையாளர் கவனத்திற்கு

ஆய்வாளர்கள் தங்களது ஆய்வுக்கட்டுரையைச் சொற்கோப்பில் (Word document) A4 தாளில் 1.0 இடை வெளியுடன் லதா யுனிகோடு (Latha Unicode; Font Size: 9) எழுத்துருவில் கணினி வழி தட்டச்சு செய்து chellammaltamildepartment@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 25.04.2021 ஆம் தேதிக்குள் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். ஆய்வுக்கட்டுரைகள் இதற்குமுன் வேறெந்த ஊடகங்களிலும் வெளிவந்ததாக இருத்தல் கூடாது. ஆய்வு தன்னளவில் முழுமை பெற்றிருக்க வேண்டும். ஆய்வு, ஆய்வாளரின் அசல் மற்றும் புதிய கண்டடைவாக இருக்கவேண்டும்.

தலைப்பு, ஆய்வுச்சுருக்கம் மற்றும் துணைநூற்பட்டியல் முதலியன தமிழிலும் ஆங்கிலத்திலும் அமைய வேண்டும். (ஆங்கிலத்தில் அமையவேண்டும் என்பது கட்டாயமல்ல). ஆய்வாளர் விபரம் அயற்கூற்றில் தரப்படுதல் வேண்டும். ஆய்வுக்கட்டுரைகளில் ஆய்வுமுறைப்படி, முன்னுரை, ஆய்வுரை (உட்தலைப்புகளுடன்), முடிவுரை, மேற்கோள் குறிப்பு மற்றும் நூற்பட்டியல் இடம் பெற்றிருக்க வேண்டும். (மேற்கோள்கள் விபரங்கள் Ex: (ஆசிரியர் பெயர், (வெளிவந்த ஆண்டு) புத்தகத்தின் பெயர், (வெளிவந்த பதிப்பு வரிசை) வெளியீட்டாளர் பெயர் மற்றும் முழு முகவரி.) கட்டுரையின் இறுதியில் இடம்பெறவேண்டும்).

கருத்தரங்க நாளன்று ஆய்வாளர்கள் தங்களின் ஆய்வுக் கட்டுரைகளை கட்டாயம் வாசித்தளிக்க வேண்டும். கருத்தரங்கில் கலந்து கொண்டு கட்டுரை வாசிக்கும் அனைத்து ஆய்வாளர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படும். ஆய்வு குறித்து பங்கேற்பாளர்கள் எழுப்பும் வினாக்களும் விவாதங்களும் கட்டுரையின் மீதான முதல் மதிப்பீடாக அமையும் அவற்றை அடிப்படையாகக் கொண்டு திருத்தியமைக்கப்பட்ட கட்டுரைகள் மின்னிதழில் வெளியிடுவதற்குப் பரிந்தனுப்பப்படும். அவ்வாறு பெறப்பட்ட கட்டுரைகள் சர்வதேசத் தமிழ் ஆய்விதழின் (UGC – Care Listed Journal) வல்லுநர் குழுவின் மதிப்பீட்டிற்கு உட்பட்டு வெளியிடுவதற்கு பரிந்துரைக்கப்படும். அக்கட்டுரைகள் மட்டுமே இணையத்தில் சிறப்பிதழாக வெளியிடப்படும். வெளியிடப்பட்ட கட்டுரைகள் புத்தக வடிவிலும் (PRINTED BOOK) சிறப்பிதழாக ஆய்வாளருக்கு அனுப்பி வைக்கப்படும். தேர்வு செய்யப்பட்ட கட்டுரையாளர்கள் இணையவெளியீடு மற்றும் நூலாக்கம் இரண்டிற்கும் சேர்த்து வெளியீட்டுக் கட்டணமாக ரூ.1500 செலுத்த வேண்டும். (வெளியீட்டுக் கட்டணம் கட்டுரை தேர்வான பிறகு ஆய்விதழுக்குச் செலுத்தினால் போதுமானது. ஆய்விதழுக்குரிய கட்டணத்தைச் செலுத்துவதற்கான வங்கிவிபரம் தேர்வு செய்யப்பட்ட கட்டுரையாளர்களுக்கு பின்னர் அறிவிக்கப்படும்). கருத்தரங்கில் பங்கேற்கும் அனைவரும் கட்டாயம் பதிவுக்கட்டணம் மட்டும் செலுத்தித் தங்களின் பங்கேற்பை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

## கருத்தரங்கத் தலைவர்

முனைவர் ஸ்ரீமதி இராமலிங்கம்
முதல்வர் (கூடுதல் பொறுப்பு)

## கருத்தரங்கச் செயலர்

முனைவர் ப.விமலா,
தலைவர்,
முதுகலைத் தமிழியல் (ம) உயராய்வுத்துறை
9444231514

## கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்கள்

செல்லம்மாள் மகளிர் கல்லூரி
முதுகலைத் தமிழியல் (ம)
உயராய்வுத்துறை பேராசிரியர்கள்

முனைவர் செ.கனிமொழி கைபேசி : 9840851159
முனைவர் ப.தேன்மொழி கைபேசி : 9150378558
முனைவர் செ.ஹேமலதா கைபேசி : 9382703586
முனைவர் மா.ரமாதேவி கைபேசி : 8056148511
முனைவர் சீ.சியாமளாகௌரி
முனைவர் சு.சுசா
முனைவர் தா.அ.சிரிஷா
முனைவர் இரா.விமலாதேவி
செல்வி கி.புவனேஸ்வரி
திருமதி ச.யோகேஸ்வரி
முனைவர் சா.வனிதா
முனைவர் மோ.ரூபா
திருமதி கு.வசந்தம்
முனைவர் ச.சுமதி

**கட்டுரை சமர்ப்பிக்கும் கடைசி நாள்**

**நாள் : 25.04.2021**

# செல்லம்மாள் மகளிர் கல்லூரி

பச்சையப்பன் அறக்கட்டளை, கிண்டி, சென்னை-32
(தேசியத்தர மதிப்பீட்டின் B தகுதி பெற்றது)

**முதுகலைத் தமிழியல் (ம) உயராய்வுத்துறை நடத்தும்**

**நான்காவது பன்னாட்டுக் கருத்தரங்கம்**

கருத்தரங்கத் தலைப்பு

# சமகால இலக்கியங்களில் சமூக மாற்றங்கள்

**நாள் : 10.05.2021**

**தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள் சர்வதேசத் தமிழ் ஆய்விதழில் *(UGC-Care Listed Journal)* வெளியிடப்படும்**

கட்டுரையை பின்வரும்
மின்னஞ்சல் மூலமாக
சமர்ப்பிக்கலாம்

Email: chellammaltamildepartment@gmail.com

தொடர்புக்கு
+919840851159, +919150378558

முதுகலைத் தமிழியல் (ம)
உயராய்வுத்துறை

வணக்கம்.

பச்சையப்பன் அறக்கட்டளையின்கீழ் இயங்கும் செல்லம்மாள் மகளிர் கல்லூரி *1971* ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. திருமதி. செல்லம்மாள் அவர்கள் வழங்கிய பெருங்கொடையை மூலதனமாகக் கொண்டு பல்வேறு பாடப்பிரிவுகள் மற்றும் ஆராய்ச்சி துறைகளுடன் *3500* க்கும் மேற்பட்ட மாணவர்கள் சுழற்சி-*I*, சுழற்சி-*II* ஆகிய இரு பிரிவுகளிலும் பயின்று வருகின்றனர். சென்னையின் மையப்பகுதியில் அமைந்துள்ள இக்கல்லூரி கடந்த *50* ஆண்டுகளாக கல்விப்பணியை செவ்வனே ஆற்றிவருகின்றது.

இப்பெருமைமிகு கல்லூரியில் முதுகலைத் தமிழியல் (ம) உயராய்வுத்துறையானது தமிழ்மொழி, இலக்கியம் மற்றும் ஆராய்ச்சியை வளர்க்கும் நோக்கத்தோடு பன்னாட்டுக் கருத்தரங்கம், தேசியக் கருத்தரங்கம், பயிலரங்கம், இணையவழிக் கருத்தரங்கம் என்று பல கருத்தரங்குகளை நடத்தியுள்ளது. தற்போது "சமகால இலக்கியங்களில் சமூக மாற்றங்கள்" என்னும் பொருண்மையில் இக்கருத்தரங்கை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

அழகியலோடு குறிக்கோளை இயம்புவதே இலக்கியம். அவ்விலக்கியத்தின் வாயிலாக உணர்ச்சிகளையும், கருத்துக்களையும் பிறருக்கு உணர்த்த உதவுகின்ற கருவி மொழியாகும். சங்ககாலம் முதல் சமகாலம் வரை இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கை முறைகளையும் அதன் வளர்ச்சி நிலைகளையும் பிரதிபலிப்பனவாக இருந்துள்ளதை நாம் நன்கு அவதானிக்கலாம். இலக்கியவாதி ஒருவகையில் வரலாற்றாளனை விட அதிகமாக இச்சமூகத்திற்குப் பங்களிக்கிறான் என்றால் அது மிகையல்ல. இந்த பங்களிப்பின் வாயிலாகச் சமுதாயத்திற்கு சிலவற்றை திருப்பி அளிக்கிறான். மனிதன் அன்றாட இருப்பை பாதிப்புக்குள்ளாக்கும் பல்வேறு சமுதாய பிரச்சனைகளுக்கும் படைப்புகள் வழியாக படைப்பாளி முகம் கொடுக்கிறான். குழந்தை திருமணம், விதவை மறுமணம்,பெண் சிசுக்கொலை, சாதிய முரண்பாடுகள், விடுதலைப் போராட்டம், கலப்பு மணச்சிக்கல்கள், சூழலியல் பிரச்சனைகள், அரசியல் சீர்கேடுகள், ஆன்மீக மோசடிகள், விஞ்ஞான ஊழல்கள், தத்துவ தேடல்கள் என்று சமுதாயப்பரப்பில் எத்தனையோ பேரலைகள் சுனாமியாய் சுழன்றடிக்கின்றன.

ஒவ்வொரு பத்தாண்டுக்கும் ஒருமுறை சமுதாயத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்தபடியேதான் உள்ளன. இம்மாற்றங்களை மொழிமூலம் வரவுவைக்கும் அழகியல் பதிவேடுகளாகப் படைப்பிலக்கியங்கள் ஒளிர்கின்றன. இந்த ஒளியை பிடித்து திட்ப நுட்பத்துடன் ஆராயும் ஓர் எளிய ஆய்வு முயற்சியாகவே இக்கருத்தரங்கம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

செல்லம்மாள் மகளிர் கல்லூரி தொடங்கப்பட்ட *1971* ஆம் ஆண்டை ஓர் எல்லை கல்லாக கொண்டு அதன்பின் இன்று வரையிலான இலக்கிய வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு *1971-2021* என்ற *50* ஆண்டு காலம் இங்கு சமகாலமாகத் தேர்ந்து கொள்ளப்பட்டுள்ளது. இக்குறிப்பிட்ட காலகட்டத்தில் வெளிவந்துள்ள அனைத்து தமிழ்ப்படைப்புகளையும் ஆய்வுப்பொருளாகக் கொண்ட ஆய்வுக்கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. இதில் கல்லூரி பேராசிரியர்கள், பள்ளி ஆசிரியர்கள், ஆய்வு மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள் என்று அனைவரும் கட்டுரைகள் வழங்கலாம்.

## கருத்தரங்கில் பங்கேற்க பதிவுக்கட்டணம்

ஆய்வாளர்கள்: - ரூ.*100*

பேராசிரியர்கள் மற்றும் ஆர்வலர்கள்: - ரூ.*200*

பதிவுக்கட்டணம், செலுத்த வேண்டிய வங்கி விபரம்

The Principal,
Chellammal Women's College,
Guindy, Chennai –32,
என்ற பெயருக்கு வரைவோலை (D.D.) எடுக்கவும்.

(அல்லது)

Google Pay No : 9444231514

Pattimandram vimalaannadurai

## சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், இந்தியாவின் முதல் *Google Scholar, CrossRef indexed* மற்றும் *DOI* எண் பதிவுபெற்ற தமிழ் ஆய்விதழாகவும், பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்ற ஆய்விதழாகவும், பல்வேறு ஆய்வு மேம்பாட்டுப் பயிலரங்குகளையும் கருத்தரங்குகளையும் முன்னெடுத்து தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்ற ஆய்விதழாகவும் இருந்துவருகின்றது. அத்துடன் தமிழாய்வுகளை உலகத்தரத்திற்கு உயர்த்தும் நோக்கில் ஆய்வுப்புல வல்லுநர்களின் மதிப்பீட்டைப்பெற்று தரமான ஆய்வுக்கட்டுரைகளை வெளியிடுதல், அவற்றை உலகளாவிய பயன்பாட்டிற்கும் அங்கீகாரத்திற்கும் ஏற்றவகையில் எண்ணிமப்படுத்துதல் (*digitize*), குறுந்திட்ட ஆய்வுகளுக்கு நிதியுதவி அளித்தல் முதலிய பணிகளை தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது. மேலும் பன்னாட்டு தமிழறிஞர்களோடு தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு தமிழ் ஆய்வுவளர்ச்சிக்கான முன்னெடுப்புப் பணிகளை மேற்கொள்ளுதல், ஆய்வாளர்களுக்கும், ஆய்வுப்புல அறிஞர்களுக்குமிடையே ஆய்வு சார்ந்து உரையாடுவதற்கும் விவாதிப்பதற்குமான வாய்ப்புகளையும், அதற்கான சூழலையும் ஏற்படுத்தித் தருதல், தமிழ்ச்சூழலில் இதுவரையிலான ஆய்வுப்போக்குகளையும் அவற்றின் போதாமைகளையும் மதிப்பிட்டு, புதிய களங்களில் புதிய அணுகுமுறைகளில் ஆய்வுசெய்ய ஆய்வாளர்களை ஊக்குவித்தல், ஆய்வுத்திறன் மேம்பட்ட செழுமைமிக்கதொரு ஆய்வாளச் சமூகத்தை உருவாக்குதல் போன்ற பல்வேறு ஆய்வுவளச் செயல்பாடுகளில் அதிக அக்கறையோடு முன்னிற்கின்றது. இதன் தொடர்ச்சியாக இக்கருத்தரங்கை பச்சையப்பன் அறக்கட்டளையின் கீழ் இயங்கும் செல்லம்மாள் மகளிர் கல்லூரியுடன் இணைந்து நடத்தத் திட்டமிட்டுள்ளது.

கட்டண விபரங்களையும், கட்டுரையையும் இணைத்து *chellammaltamildepartment@gmail.com* என்ற மின்னஞ்சல் முகவரிக்கு *25.04.2021* ஆம் தேதிக்குள் அனுப்பவும்.

கட்டுரையில் ஆசிரியர் பெயர், பதவி, முழுமுகவரி, தொடர்பு எண், மின்னஞ்சல் முகவரி உள்ளிட்ட விபரங்களை கட்டாயம் பதிவு செய்யவும்.